
/பதிவுத் தபால்/

# தகவல் பெறும் சட்டம் - 2005

அனுப்புநர்




V.சிங்கராயர்,
56, பொதிகை நகர்,
மேலூர் ரோடு 1வது தெரு,
சிவகங்கை – 630561.

பெறுநர்

பொது தகவல் அளிக்கும் அலுவலர் அவர்கள்,
கருவூலம் மற்றும் கணக்குத்துறை ஆணையர் அலுவலகம்,
நந்தனம், சென்னை – 35.

ஐயா

நீதிமன்றத்தில் முறையீடு செய்தல் சார்பாக கீழ்க்காணும் வினாக்களுக்கு, தனித்தனியே தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பதில் தருமாறு வேண்டுகிறேன்.

1. அரசாணை 37, நாள் : 10.03.2020 தொடர்பாக, மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்களுக்கு, கருவூல ஆணையர் அலுவலர் அலுவலகத்திலிருந்து ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா அதன் விபரம் தருக.

2. அரசாணை 37, நாள் : 10.03.2020 அனைத்துத்துறை அரசு ஊழியர்களுக்கும் பொருந்துமா என்பதற்கான விபரம் தேவை.

3. அரசாணை 37, நாள் : 10.03.2020 ஆசிரியர்களுக்குப் பொருந்துமா என்ற விபரம் தருக.

4. மேற்படி அசாணை ஆசிரியர்களுக்குப் பொருந்துமெனில் அவ்வரசாணையின் எந்த சரத்து அல்லது எந்த பத்தியில், ஆசிரியர்களின் உயர்கல்வி ஊக்க ஊதியம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் தருக.

5. ஆசிரியர்களின் உயர் கல்விக்கான ஊதியத்தை நிறுத்துவது தொடர்பாக மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்களுக்கு வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப் பூர்வமாகவோ உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்ற விபரம் தருக.

த.பி.பா

Scanned with CamSca

6. ஆசிரியர்களின் உயர்கல்வி ஊக்க ஊதியம் நிறுத்தம் தொடர்பாக இவ்வலுவலகம் மூலம் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருப்பின், எந்த அரசாணையின்படி அவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தருக.

7. அரசாணை 37, நாள் : 10.03.2020ன் பார்வையில், ஆசிரியர்களின் உயர்கல்வி ஊக்க ஊதியம் தொடர்பான அரசாணைகள் எதனையும் காட்டப்பட்டுள்ளதா என்ற விபரம் தருக.

8. ஆசிரியர்களின் உயர்கல்வி ஊக்க ஊதியம் தொடர்பான அரசாணைகள் எதையும் ரத்து செய்து, அரசு ஏதும் உத்தரவு பிறப்பித்து கருவூல ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா என்ற விபரம் தருக.

9. தற்போது ஆசிரியர்களுக்கு உயர்கல்வி ஊக்க ஊதியம் வேண்டி பட்டியல் சமர்ப்பிக்கப்படும் போது அனுமதிக்கப்படுமா அல்லது நிராகரிக்கப்படுமா நிராகரிக்கப்படுமெனில் அதற்கான காரணத்தை விளக்கமுடன் தருக.

தங்கள் உண்மையுள்ள,

[signature]

நாள்: 26.08.2020.

இடம்: சிவகங்கை.

Scanned with CamSca